

சென்னை எழும்பூரில் இருந்து சென்டிரல் வரை சுரங்கப்பாதை மெட்ரோ ரெயிலில் ஆர்வத்துடன் பயணம் செய்யும் பயணிகள்.



ஏ.ஜி.டி.எம்.எஸ்.-சின்னமலை இடையே நேற்று தொடங்கிய மெட்ரோ ரெயில் சுரங்கப்பாதையில் இயக்கப்பட்ட மெட்ரோ ரெயிலில் ஏறுவதற்காக ஆவலுடன் காத்திருந்த பயணிகளை படத்தில் காணலாம்.

சின்னமலை - டி.எம்.எஸ்.

# நேரு பூங்கா - சென்டிரல் சுரங்கப்பாதையில் மெட்ரோ ரெயில் போக்குவரத்து தொடங்கியது

## எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்தார்

சென்னை, மே.26-

சென்னையில் நேரு பூங்கா-சென்டிரல் மற்றும் சின்னமலை-ஏ.ஜி-டி.எம்.எஸ். இடையேயான சுரங்கப்பாதைகளில் மெட்ரோ ரெயில் போக்குவரத்தை முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, மத்திய மந்திரி ஹர்தீப் சிங் புரி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

### மெட்ரோ ரெயில் சேவை

சென்னையில் மாநகரில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு மெட்ரோ ரெயில் திட்டத்தை செயல்படுத்த கடந்த 2007-ம் ஆண்டு முடிவு செய்யப்பட்டது. அதன்படி 2 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில்

### சென்டிரலில் இருந்து மெட்ரோ ரெயில் கட்டணம் எவ்வளவு?

சென்டிரலில் இருந்து மெட்ரோ ரெயில் கட்டண விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| சென்டிரல்-எழும்பூர் ....... | ரூ.10 |
| கீழ்ப்பாக்கம் வரை.......... | ரூ.20 |
| செனாய்நகர் வரை......... | ரூ.30 |
| சி.எம்.பி.டி. வரை........... | ரூ.40 |
| அசோக்நகர் வரை ......... | ரூ.50 |
| ஆலந்தூர், பரங்கிமலை வரை.......... | ரூ.60 |
| ஏ.ஜி.டி.எம்.எஸ். வரை.... | ரூ.70 |
| சைதாப்பேட்டை வரை .... | ரூ.60 |
| விமான நிலையம் வரை.. | ரூ.70 |

ரெயில்களின் தேவையை பொறுப்புடன் நிறைவேற்ற உதவும். இந்த கொள்கையின் படி தனியார் முதலீட்டாளர்களுக்கு பெரிய அளவில் கதவு திறந்து விடப்படும். தனியார் பங்களிப்புடன் தான் மத்திய அரசின் உதவியைப் பெறமுடியும் என்பது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. பெரிய முதலீடுகளுக்கு தனியார் மற்றும் மற்றும் பிற புதுமை முறைகள் அவசியமாக்கப்பட்டுள்ளது.

### ஆக்கப்பூர்வமான நடவடிக்கை

தமிழக அரசும் புதிய மெட்ரோ ரெயில் கொள்கையை அமல்படுத்தும் விதமாக ஆக்கப்பூர்வமான நடவ



சென்னை எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையத்தின் டிக்கெட் கவுண்டர்.

டிக்கைகளை மேற்கொள்வது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். முதல் கட்ட மெட்ரோ ரெயில் பணிகள் 2018-ம் ஆண்டு நிறைவடையும். முதல் கட்ட விரிவாக்கத் திட்டப்பணிகள் 2019-2020-ம் ஆண்டில் நிறைவடையும். சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்திற்கு என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

போக்குவரத்தை தொடங்க திட்டம் தயாரிக்கப்பட்டது. விமானநிலையம் முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் வரை (33 கிலோ மீட்டர் நீளம்) முதல் வழித்தடமும், சென்டிரல் முதல் பரங்கிமலை வரை (22 கி.மீ. நீளம்) 2-வது வழித்தடமும் உருவாக்கப்பட்டது.

இதற்காக 2009-ம் ஆண்டு ரூ.14 ஆயிரத்து 600 கோடி நிதி ஒதுக்கப்பட்டு மெட்ரோ ரெயில் பணிகள் தொடங்கப்பட்டது. உயர்மட்டப்பாதை, சுரங்கப்பாதை என்று 2 விதமாக ரெயில்பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்றன. 7 ஆண்டுகளுக்கு பிறகு, 2-வது வழித்தடத்தில் உள்ள கோயம்பேடு- ஆலந்தூர் இடையே (10 கி.மீ.) உயர்மட்டப்பாதையில் கடந்த 2015-ம் ஆண்டு ஜூன் 29-ந்தேதி அன்று மெட்ரோ ரெயில் போக்குவரத்து தொடங்கியது.

## நேரு பூங்கா- சென்டிரல்

தொடர்ந்து முதல் வழித்தடத்தில் உள்ள சின்னமலை- விமானநிலையம் (9 கி.மீ. நீளம்) இடையேயும், 2-வது வழித்தடத்தில் உள்ள ஆலந்தூர்- பரங்கிமலை (1.2 கி.மீ. நீளம்) இடையேயும் கடந்த 2016-ம் ஆண்டு செப்டம்பர் 21-ந்தேதி அன்று மெட்ரோ ரெயில் போக்குவரத்து தொடங்கியது. அதனை தொடர்ந்து 2-வது வழித்தடத்தில் கோயம்பேடு அடுத்த திருமங்கலம்-நேரு பூங்கா (7.40 கி.மீ. நீளம்) இடையே சுரங்கப் பாதையில் கடந்த ஆண்டு மே.14-ந்தேதி போக்குவரத்து தொடங்கி வைக்கப்பட்டது.

தற்போது நேரு பூங்கா-சென்டிரல் (2.7 கி.மீ. நீளம்) மற்றும் சின்னமலை-தேனாம்பேட்டை ஏ.ஜி-டி.எம்.எஸ். இடையே (4.5 கி.மீ. நீளம்) கொண்ட சுரங்கப்பாதையில் அனைத்து பணிகளும் நிறைவடைந்தநிலையில் மே 25-ந்தேதி போக்குவரத்து தொடங்கும் என அறிவிக்கப்பட்டது.

## தொடங்கி வைத்தனர்

இதற்கான விழா எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் நேற்று பகல் 12.30 மணிக்கு நடந்தது. விழாவில் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான இணை மந்திரி (தனி பொறுப்பு) ஹர்தீப் சிங் புரி ஆகியோர் கலந்து கொண்டு, நேரு பூங்கா – சென்டிரல், சின்னமலை – ஏ.ஜி-டி.எம்.எஸ். இடையே சுரங்கப் பாதையில் அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரெயில் நிலையங்களை குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தனர். பின்னர், சுரங்க ரெயில் நிலையத்தில் தயாராக நின்று இருந்த மெட்ரோ ரெயிலை பச்சை கொடி காட்டி மெட்ரோ ரெயில் சேவையை தொடங்கி வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் சபாநாயகர் ப.தனபால், துணை முதல்-அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், மத்திய இணை மந்திரி பொன்.ராதாகிருஷ்ணன், அமைச்சர்கள் டி.ஜெயகுமார், எம்.சி.சம்பத் உள்ளிட்ட அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், மத்திய அரசு செயலாளர் துர்கா சங்கர் மிஷ்ரா, மெட்ரோ ரெயில் நிறுவன நிர்வாக அலுவலர் பங்கஜ்குமார் பன்சால், தமிழக அரசு முதன்மைச் செயலாளர், (திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை) டி.வி.சோமநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

தொடக்க விழாவை யொட்டி நேற்று பயணிகளுக்கு இலவச சேவை அளிக்கப்பட்டது.

தொடக்க விழாவில் மத்திய மந்திரி ஹர்தீப் சிங் புரி பேசியதாவது:-

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவை, புதிய மெட்ரோ ரெயில் கொள்கை 2017-க்கு ஒப்புதல் அளித்தது. இந்த கொள்கை ஏராளமான மெட்ரோ நகரங்களில்